ந.க.எண். வி4/42198/2019 நாள் : 09.11.2019

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,

இராமநாதபுரம் மாவட்டம்

# அறிவிக்கை (Notification)

## ஈப்பு ஓட்டுநர், பதிவறை எழுத்தர், மற்றும் இரவுக் காவலர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

இராமநாதபுரம் மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகில், அரசு தலைப்பில் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர், பதிவறை எழுத்தர், மற்றும் இரவுக் காவலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### காலிப்பணியிடங்களின் விபரம்

| வ. எண் | பதவியின் பெயர் | இனசுழற்சி விபரம் | ஊதிய விபரம் |
|---|---|---|---|
| 1. | ஈப்பு ஓட்டுநர் | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | ரூ.19,500-62,000 (நிலை 8) |
| 2 | பதிவறை எழுத்தர் | பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) | ரூ.15,900-50,400 (நிலை 2) |
| 3 | இரவுக் காவலர் | பொது போட்டி - ஆதரவற்ற விதவை (முன்னுரிமையற்றவர்) | ரூ.15,700-50,000 (நிலை 1) |

**தகுதிகள் :-**

1) வயது தகுதி

| வ. எண் | இனம் | வயது (01/07/2019 அன்று) |
|---|---|---|
| 1 | பொதுப்பிரிவினர் | 30 |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பிற்படுத்தப்பட்டோர் | 32 |
| 3 | ஆதிதிராவிடர் /பழங்குடியினர் | 35 |

2) கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள்

| வ. எண் | பதவியின் பெயர் | கல்வித் தகுதி | இதர தகுதி |
|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | எட்டாம் வகுப்பு தேர்ச்சி | ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். ஐந்தாண்டுகளுக்கு குறையாமல் மோட்டார் வாகனங்கள் ஓட்டுவதில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 2 | பதிவறை எழுத்தர் | பத்தாம் வகுப்பு தேர்ச்சியின்மை | ------ |
| 3 | இரவுக் காவலர் | தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும். | ------ |

**நிபந்தனைகள்:**

1) விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். (இருப்பிட சான்று தொடர்புடைய வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்)

2) இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதி ஆகியவைகளற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3) ஒவ்வொரு பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். (ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் )

4) அரசு விதிகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் மாவட்ட ஆட்சியர் (வளர்ச்சி பரிவு) அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ **25.11.2019 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள்** அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்

ஈப்பு ஓட்டுநர், பதிவறை எழுத்தர், மற்றும் இரவுக் காவலர் காலிப்பணியிடங்களுக்கான விபரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் மாவட்ட ஆட்சியர்(வளர்ச்சி பிரிவு) அலுவலகத்திலும், தேசிய தொழில் நெறி வழிகாட்டு மைய இணையதள(National Career Service Portal) www.ncs.gov.in மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தின் https://ramanathapuram.nic.in இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

9/11/19.

மாவட்ட ஆட்சியருக்காக,

இராமநாதபுரம் .

9/11/19.

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு

## ஈப்பு ஓட்டுநர் , பதிவறை எழுத்தர் மற்றும் இரவுக் காவலர் பணிக்கான விண்ணப்பம்

**(விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 25.11.2019)**

**குறியீடு எண்:** (அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்)

(பொருத்தமான இடத்தில் ✓செய்யவும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | | புகைப்படம்<br>(கையொப்பத்துடன்) |
| 2. | பாலினம் | ஆண்/ பெண்/ திருநங்கை | |
| 3. | விண்ணப்பிக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | | |
| 4. | விண்ணப்பிக்கும் ஊராட்சியின் பெயர் | | |
| 5. | விண்ணப்பிக்கும் ஒதுக்கீடு | | |
| 6. | தந்தை / கணவர் பெயர் | | |
| 7. | நிலையான முகவரி | கதவு எண்<br>தெரு பெயர்<br>கிராமம்<br>அஞ்சல்<br>மாவட்டம்<br>பின் கோடு | |
| 8. | விண்ணப்பதாரரின் விபரம்<br>அ) தொலைபேசி எண்<br>ஆ) கைபேசி எண்<br>இ) மின்னஞ்சல் முகவரி | | |
| 9. | பிறந்த தேதி | DD / MM / YYYY | |
| 10. | வயது | | |
| 11. | இனம்<br>(பொருத்தமானவற்றை ✓ செய்யவும்) | General / BC / BC(M) / MBC / SC / SC(A) / ST | |
| 12. | வேலைவாய்ப்பு பதிவு விபரம் (இருப்பின்) | பதிவுஎண்<br>பதிவுநாள்<br>புதுப்பிக்கப்பட வேண்டிய நாள் | |
| 13. | அரசு பணிகளில் சேர முன்னுரிமை பெற்றவரா? | ஆம்/ இல்லை | |

| | | | |
|---|---|---|---|
| 14. | ஆம் எனில் எந்த வகையான முன்னுரிமை? (ஆதாரமாக சான்று நகல் இணைக்கப்படவேண்டும்) | ஆதரவற்ற விதவை (உரிய அலுவலரின் சான்று நகல் இணைக்கப்படவேண்டும்). | |
| | | முன்னாள் இராணுவத்தினர் | |
| | | இதர முன்னுரிமையுள்ளவர் (முன்னுரிமையினை தவறாமல் குறிப்பிடவேண்டும்) | |
| 15. | கல்வித்தகுதி | | |
| 16. | மதம் | இந்து / முஸ்லீம் / கிறிஸ்தவம் / பிற | |

| | | |
|---|---|---|
| | **கீழ்கண்டசான்று நகல்களை இணைத்துள்ளேன்** | (பொருத்தமானவற்றை ✓செய்யவும்) |
| அ) | பள்ளிமாற்றுச் சான்றிதழ் | |
| ஆ) | கல்வித் தகுதிச்சான்று | |
| இ) | இருப்பிட சான்றிதழ்<br>(தொடர்புடைய வட்டாட்சியரிடம் பெறப்பட வேண்டும்) | |
| ஈ) | சாதிச் சான்றிதழ் | |
| உ) | இதர தகுதிச் சான்று | |
| ஊ) | முன்னுரிமைச் சான்று (பொருந்தும் நேர்வில்) | |

### உறுதிமொழி

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் அதன் மீது எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள் :

விண்ணப்பதாரர்

கையொப்பம்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி பிரிவு) அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராம ஊராட்சிப் பணியிடத்திற்கும் தகுதியின் அடிப்படையில் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும். (ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்திருந்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் )